டிஜிட்டல் டெய்லி

# அக்ரி-டாக்டர்

agridoctor.in

agridoctor.in | 09.01.2025 வியாழக்கிழமை | பக்கங்கள் 25 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 168 - Madurai | Online Edition

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

# தமிழகத்தில் வருகிற 11ம் தேதி 5 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு!

சென்னை, ஜன.8

தமிழகத்தில் வருகிற 11ம் தேதி 5 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வடதமிழகம் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளில் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. தென்கிழக்கு வங்கக் கடல் மற்றும் அதனை ஒட்டிய பூமத்திய ரேகையை ஒட்டிய இந்திய பெருங்கடல் பகுதிகளில் ஒரு வளி மண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது.



இதன் காரணமாக இன்று கடலோர தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். உள்தமிழகத்தில் பொதுவாக வறண்ட வானிலை நிலவக்கூடும். பொதுவாக காலை வேளையில் லேசான பனிமூட்டம் காணப்படும். நீலகிரி மாவட்டத்தின் மலைப்பகுதிகளில், இரவு நேரங்களில் ஓரிரு இடங்களில் உறை பனிக்கு வாய்ப்புள்ளது.

நாளை 10-01-25ல் கடலோர தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், உள் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். நாளை மறுநாள் 11ம் தேதி கடலோர தமிழகத்தில் அநேக இடங்களிலும், புதுவை மற்றும் காரைக் கால் பகுதிகளிலும், உள்தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும். தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், காரைக் கால் பகுதிகளிலும் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் திறந்தவெளி மற்றும் தொலைதூரக்கல்வி இயக்ககத்தின் பட்டமளிப்பு விழா

கோயம்புத்தூர், ஜன.8

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் திறந்தவெளி மற்றும் தொலைதூரக்கல்வி இயக்ககத்தின் பட்டமளிப்பு விழா இன்று (9.01.25) பட்டமளிப்புவிழா அரங்கத்தில் நடைபெற உள்ளது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் வெ.கீதாலட்சுமி தலைமை உரையாற்றவுள்ளார்.

பேராசிரியர் முத்துபாண்டியன் அசோக்குமார், இயக்குனர், மெல்போர்ன் குளோபல் சென்டர், டெல்லி, துணை துணைவேந்தர் சர்வதேசம் (தெற்கு ஆசியா & மத்திய கிழக்கு), மெல்போர்ன் பல்கலைக்கழகம், ஆஸ்திரேலியா சிறப்புரை ஆற்றுகிறார்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# நன்னீர்ப் பாசியைக் கொண்டு பயோடீசல் உற்பத்தி செய்யும் புதுமையான தொழில்நுட்பத்திற்கு இரண்டாம் பரிசு

கோயம்புத்தூர், ஜன.8

கோவை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரித் தொழில்நுட்ப மையத்தின் 'இ-யுவா' மற்றும் 'காக்ஸ்பிட்' நிறுவனம் இணைந்து நடத்திய அக்ரி பிட்ச் 2.0 போட்டியில், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் சுற்றுச்சூழல் அறிவியல் துறை மாணவர்களான, ஐஸ்வர்யா, பிரியதர்ஷினி, ஆண்டோரஷ்வின் ஆகியோரின் "ட்ரையோ'ஸ் டானிக்" குழு இரண்டாம் பரிசை வென்றுள்ளது.




இந்த மாணவர்கள், நன்னீர்ப் பாசியைக் கொண்டு கரியமில வாயுவைச் சேகரித்து, அதே பாசியைக் கொண்டு பயோடீசல் தயாரிக்கும் ஒரு புதுமையான தொழில்நுட்பத்தை உருவாக்கி உள்ளனர். இந்த தொழில்நுட்பம், காலநிலை மாற்றத்தின் தாக்கத்தைக் குறைக்க உதவும் ஒரு புதிய வழியாகக் கருதப்படுகிறது. இந்த தொழில்நுட்பம், அதிகரித்து வரும் கரியமில வாயு அளவைக் குறைத்து, சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும். மேலும், இது புதுப்பிக்கத்தக்க எரிபொருள் ஆதாரத்தை உருவாக்கி, எரிபொருள் பற்றாக்குறையைத் தீர்க்க உதவும். இந்த மாணவர்கள், தங்களது இந்த புதுமையான தொழில்நுட்பத்தை மேலும் மேம்படுத்தி, வணிக ரீதியாக செயல்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# இயற்கை வேளாண்மை மற்றும் இடுபொருட்கள் தயாரிப்பு பயிற்சி



திருச்சி, ஜன.8

திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருவரம்பூர் வட்டாரத்தில் வேளாண்மை துறையின் மூலம் செயல்படும் அட்மா திட்டத்தின் கீழ் நடராஜபுரம் கிராம விவசாயிகளுக்கு பாரம்பரிய நெல் இரகங்கள் சாகுபடி பண்ணைப்பள்ளி வகுப்பில் இயற்கை வேளாண்மை மற்றும் இடுபொருட்கள் தயாரிப்பு பற்றி பயிற்சி அளிக்கப்பட்டது. இதில் வேளாண்மை உதவி இயக்குனர் சுகன்யா தேவி தலைமை வகித்து துறை சார்ந்த திட்டங்கள் பற்றி எடுத்துக் கூறினார். அங்கக வேளாண்மையில் முன்னோடி விவசாயியாக செயல்படும் முத்துக்குமார் பஞ்சகாவியா, மீன்




அமிலம், புண்ணாக்கு கரைசல், கன ஜீவாமிர்தம், மூலிகை பூச்சி விரட்டி, பஞ்சகாவியா விளக்கு, போன்ற இயற்கை இடுபொருள்களின் முக்கியத்துவம் மற்றும் பயன்பாடுகள் பற்றி எடுத்துக் கூறி தேமோர் கரைசல் முட்டை கரைசல், பூச்சி விரட்டி செயல் விளக்கம் செய்து காண்பித்தார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் சுபாதேவி வரவேற்புரையாற்றி அட்மா திட்ட செயல்பாடுகள் குறித்தும் பயிற்சியின் முக்கியத்துவம் குறித்து எடுத்துக் கூறினார். உதவி தொழில்நுட்ப மேலாளர் சரஸ்வதி நெல் நுண்ணூட்டத்தின் முக்கியத்துவம் குறித்து எடுத்து கூறினார்.

இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி தொழிநுட்ப மேலாளர் நீலகண்டன் செய்திருந்தனர்.

| கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் | | | | | | | 08.01.2025 |
|---|---|---|---|---|---|---|---|
| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
| 1 | கத்திரி(Hybrid) | 40 | 45 | 56 | காளான் (சிப்பி/பட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 40 | 46 | 57 | உருளை (பிற) | 30 | 36 |
| 1B | கத்திரி(Nadu) | 60 | 66 | 57A | உருளை(ஊட்டி) | 30 | 45 |
| 2 | வெண்டை | 50 | 56 | 58 | மேரக்காய் | 22 | 26 |
| 3 | தக்காளி (நாடு) | 14 | 17 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 34 | 38 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 14 | 16 | 60 | கேரட் | 55 | 60 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 70 | 75 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 60 | 68 |
| 6 | புடலை | 30 | 35 | 62 | நூல்கோல் | 34 | 38 |
| 7 | பீர்க்கன் | 50 | 54 | 63 | டர்னிப் | 40 | 48 |
| 8 | சுரைக்காய் | 22 | 28 | 64 | மு.கோஸ் | 22 | 26 |
| 9 | பாகற்காய் | 35 | 40 | 65 | | | |
| 10 | கொத்தவரை | 40 | 48 | 66 | காளிபிளவர் | 40 | 44 |
| 11 | பூசணி | 14 | 18 | 67 | பட்டாணி | 70 | 75 |
| 12 | அரசாணி | 14 | 18 | 68 | பூண்டு | 200 | 288 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 40 | 46 | 69 | இஞ்சி | 40 | 46 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 45 | 50 | 70 | புருக்கோலின் | 170 | 180 |
| 15 | சி.வெங்காயம் | 74 | 80 | 71 | பென்னி பீன்ஸ் | 70 | 74 |
| 16 | பெ.வெங்காயம் | 38 | 42 | 72 | குடமிளகாய் | 60 | 65 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 40 | 46 | 73 | | | |
| 18 | பச்சை மொச்சை | 70 | 74 | 74 | | | |
| 19 | முருங்கை | 110 | 130 | 71A | | | |
| 20 | தேங்காய் | 60 | 64 | | | | |
| 21 | மாங்காய் | 100 | 104 | | | | |
| 22 | வாழைக்காய் | 30 | 35 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 38 | 42 | | | | |
| 24 | கருணைகிழங்கு | 55 | 60 | 75 | எலுமிச்சை | 60 | 65 |
| 25 | சேப்பங்கிழங்கு | 50 | 55 | 76 | கொய்யா (வெள்ளை/சிவப்பு) | 40 | 50 |
| 26 | மரவள்ளி | 28 | 32 | 77 | சப்போட்டா | 45 | 50 |
| 27 | சர்க்கரைவள்ளி | 40 | 45 | 78 | பப்பாளி | 30 | 36 |
| 28 | கறிவேப்பிலை | 74 | 78 | 79 | மாதுளை | 120 | 200 |
| 29 | கொத்தமல்லி | 25 | 30 | 80 | திராட்சை | 70 | 80 |
| 30 | புதினா | 7 | 8 | 81 | மாம்பழம் | 150 | 180 |
| 31 | அகத்திக்கீரை | 18 | 20 | 82 | ஆப்பிள் (சிம்லா/காலா) | 140 | 220 |
| 32 | தண்டுக்கீரை | 18 | 20 | 83 | ஆரஞ்ச் | 50 | 70 |
| 33 | சுக்கிட்டி&பாலாக்கு | 18 | 20 | 84 | சாத்துக்குடி | 60 | 70 |
| 34 | அரைக்கீரை | 18 | 20 | 85 | அன்னாசி பழம் | 50 | 55 |
| 35 | சிறுகீரை | 18 | 20 | 86 | சீதாப்பழம் | 45 | 50 |
| 36 | வெந்தயக்கீரை | 20 | 25 | 87 | முலாம்பழம் | 45 | 50 |
| 37 | பருப்புக்கீரை | 18 | 20 | 88 | தர்பூசணி | 15 | 20 |
| 38 | முருங்கைக்கீரை | 8 | 10 | 89 | | | |
| 39 | வல்லாரை | 8 | 10 | 90 | கதளி | 50 | 55 |
| 40 | கோவக்காய் | 50 | 60 | 91 | பூவன் | 35 | 38 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 45 | 50 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 35 | 38 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 30 | 35 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 20 | 24 | 95 | நாடன் | 45 | 50 |
| 45 | வெள்ளரி | 28 | 32 | 96 | நேந்திரன் | 65 | 70 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 0 | 0 | 97 | செவ்வாழை | 80 | 85 |
| 47 | சுண்டக்காய் | 140 | 150 | 98 | பேரிக்காய் | 150 | 165 |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | | |
| 49 | காளிபிளவர் (உள்ளூர்) | 30 | 34 | 100 | கறிப்பலா | 40 | 44 |
| 50 | நிலக்கடலை | 60 | 70 | 101 | டிராகன் ப்ரூட் | 140 | 150 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 25 | 30 | 102 | நெல்லிக்காய் | 70 | 80 |
| 52 | | | | 103 | Seedless திராட்சை(ப/க) | 140 | 160 |
| 53 | ஸ்வீட் கான் | 35 | 38 | | | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 30 | 32 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 30 | 35 | | | | |
| 55A | துவரை | 60 | 70 | | | | |

# தியாகனூர் விவசாயிகளுக்கு ராபி பருவ நெல் சாகுபடி தொழில்நுட்ப பயிற்சி



சேலம், ஜன.8

சேலம் மாவட்டம், தலைவாசல் வட்டாரத்தில் வேளாண்மை துறை சார்பில் அட்மா திட்டத்தின் கீழ் தியாகனூர் கிராம வேளாண் முன்னேற்ற குழுவினருக்கு ராபி பருவ பயிற்சி அளிக்கப்பட்டது. வேளாண்மை உதவி இயக்குனர் கவிதா தலைமை தாங்கினார். துணை வேளாண்மை அலுவலர் மணவழகன், ராபி பருவத்திற்கு ஏற்ற வேளாண் பயிர்கள் சாகுபடி பற்றியும், ஒருங்கிணைந்த பண்ணையம் மூலம் விவசாயிகளின் வருமானத்தை




எவ்வாறு அதிகரிப்பது என்பது குறித்து விரிவாக விவசாயிகளுக்கு எடுத்து கூறினார். உதவி வேளாண்மை அலுவலர் கார்த்திக் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தில் செயல்படுத்தப்படும் மானிய திட்டங்களை பற்றி விளக்கினார். வட்டார தொழில்நுட்பம் மேலாளர் சக்தி உயிர் உரங்களின் பயன்கள், நுண்ணூட்டங்களின் முக்கியத்துவம், செம்மை நெல் சாகுபடி பற்றி எடுத்துரைத்தார். உதவி தொழில்நுட்ப மேலாளர் ரமஷ் தனது உரையில் உழவன் செயலி பயன்பாடு, கிசான் கடன் அட்டை பெறுதல் குறித்து கூறினார். கால்நடை மருத்துவர் தங்களது துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்தும், மாடுகளுக்கு தடுப்பூசி போடுவதின் முக்கியத்துவம் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தினார். இயற்கை விவசாயி முத்துகுமார் பஞ்சகாவியா, ஜீவாமிர்தம், இயற்கை பூச்சி விரட்டி தயாரிப்பது மற்றும் பயன்படுத்துவது பற்றி விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார். உதவி தொழில்நுட்ப மேலாளர் முத்துவேல் நன்றி கூறினார்.


Rithvik Pipe®
PIPING FOR LIFE
UPVC PLUMBING PIPE | UPVC PRESSURE PIPE | WIRING PIPE | ASTM UPVC PIPE | WATER TANK
GARDEN HOSE | SUCTION HOSE | LATERAL HOSE
BIS
IS 4985 : 2021
IS : 4985
IS 9537
IS : 9537
LEAD-FREE
ISO : 9001
ONLY ISI PIPE MANUFACTURING COMPANY
LAB TEST REPORT VIA QR CODE
25 YEARS WARRANTY
20MM TO 250MM
MADE FROM FINE QUALITY RAW METERIALS
100% LEAD FREE PIPE
ONLY ISI PVC PIPE MANUFACTURING COMPANY
25 YEARS WARRANTY ON ABOVE 6 KG PVC PIPES.
20 MM TO 250MM IN ALL CLASSES AVAILABLE
PROVIDING TEST REPORT VIA QR CODE ON EACH PIPES.
Rithvik Pipe
FOR ENQUIRIES
7561822226
9645877771
Rithvik Pipe
@rithvikpipecompany
rithvikpipe@gmail.com

# உயிர்மச்சான்று பெற விவசாயிகள் விண்ணப்பிக்கலாம்

புதுக்கோட்டை, ஜன.8

புதுக்கோட்டை மாவட்ட விதைச்சான்று மற்றும் உயிர்மச் சான்று உதவி இயக்குநர் மு.மதியழகன் வெளியிட்டுள்ள செயதிக்குறிப்பில் கூறியிருப்பதாவது,

தற்போது அதிகளவில் பூச்சிக்கொல்லிகள் பயன்படுத்துவதால் சுற்றுச்சூழலில் நன்மை செய்யும் பூச்சிகளான சிலந்தி, தட்டான், குளவி போன்றவற்றின் எண்ணிக்கை கணிசமாக குறைந்து வருகிறது. ரசாயன உரங்களினாலும், பூச்சி மருந்துகளாலும் உணவு சங்கிலி நஞ்சாக்கப்பட்டு அதிகளவில் சேமிக்கப்பட்டு பலவகையான நோய்களை மனிதர்களுக்கு ஏற்படுத்துகின்றது. மேலும் மண்ணின் வளம் குன்றுதல், சிறுபான்மை பூச்சிகள் பெரும்பான்மை பூச்சிகளாக மாறுதல் போன்ற பாதகங்கள் ஏற்படுகின்றது.




எனவே, இந்த சூழ்நிலையை கருத்தில் கொண்டு எதிர்கால சந்ததியை காக்க விவசாயிகள் நீடித்த நிலையான இயற்கை விவசாயத்திற்கு மாறுவது காலத்தின் அவசியம் ஆகும். இயற்கை விவசாயம் அல்லது உயிர்ம வேளாண்மை என்பது முற்றிலும் செயற்கை இடுபொருட்களான உரங்கள், பூச்சிக் கொல்லிகள், களைக்கொல்லிகள் மற்றும் மரபணு மாற்றப்பட்ட பயிர்களை தவிர்த்து இயற்கை எரு, பசுந்தாள் உரங்கள், மண்புழு உரம், பஞ்சகாவ்யம், வேம்பு தாவரங்கள் சார்ந்த இடுபொருட்களை பயன்படுத்தி செய்யப்படும் ஒரு தற்சார்பு முறையாகும்.

விவசாயிகள் இயற்கை விவசாயம் செய்வதை ஊக்குவிக்க மத்திய மற்றும் மாநில அரசுகள் பல்வேறு திட்டங்களை

செயல்படுத்தி வருகிறது. இயற்கை வழி விவசாயத்தில் விதை முதல் உற்பத்தி, அறுவடை, விளை பொருட்கள் விற்பனை வரை அனைத்து நிலைகளிலும் கடைபிடிக்க வேண்டிய சில தர நிர்ணயங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தில் இயற்கை விளைபொருட்கள் உற்பத்தி செய்தல், பதனிடுதல் மற்றும் விற்பனைக்கு மத்திய அரசின் தேசிய உயிர்ம வேளாண்மை திட்டத்தின்படி அபீடா நிறுவனத்தின் அங்கீகாரத்தின் அடிப்படையில் உயிர்மச்சான்று எனப்படும் இயற்கை வேளாண் சான்று வழங்கப்பட்டு வருகிறது.

உயிர்மச்சான்று பெற தனிநபராகவோ அல்லது குழுவாகவோ பதிவு செய்யலாம். மேலும் வனப்பொருட்களை சேகரிப்பு செய்பவர்களும் பதிவு செய்து கொள்ளலாம். பெரு வணிக நிறுவனங்களும் அங்கக பொருட்களை பதப்படுத்துவோர் மற்றும் ஏற்றுமதி செய்வோரும் பதிவு செய்யலாம்.




தனி நபர் சிறு, குறு விவசாயிக்ள எனில் ரூ.2700/-ம், தனிநபர் பிற விவசாயிகள் எனில் ரூ.3200/-ம், குழுப்பதிவு எனில் ரூ.7200/-ம், வணிக நிறுவனம் எனில்ரூ.9400/-ம், பதிவு கட்டணமாக செலுத்த வேண்டும்.

உயிர்மச் சான்றிதழ் பெற விண்ணப்ப படிவம் பண்ணையில் பொது விவர குறிப்புகள், பண்ணையின் வரைபடம், மண் மற்றும் பாசன நீர் பரிசோதனை விவரம், ஆண்டு பயிர் திட்டம் துறையுடனான ஒப்பந்தம் மூன்று நகல்கள், நில ஆவணம்,வருமான வரி கணக்கு எண் அட்டை, ஆதார் அட்டை, புகைப்படம் மற்றும் உரிய கட்டணத்துடன் விண்ணப்பிக்கலாம்.

மேலும் விவரங்களுக்கு புதுக்கோட்டை மாவட்ட விதைச்சான்று மற்றும் உயிர்மச்சான்று உதவி இயக்குநர் அலுவலகத்ததை தொடர்பு கொள்ளலாம்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# நிலக்கடலையில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்து சீதேவி மங்கலம் வடக்கு விவசாயிகளுக்கு பண்ணை பள்ளி பயிற்சி



திருச்சி, ஜன.8

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டாரத்தில் வேளாண்மை துறையின் மூலம் செயல்படும் அட்மா திட்டத்தின் கீழ் சீதேவி மங்கலம் வடக்கு கிராம விவசாயிகளுக்கு ஒருங் கிணைந்த பயிர் மேலாண்மை பண்ணை பள்ளி பயிற்சி நடத்தப்பட்டது. இப்பயிற்சியில் வேளாண்மை உதவி இயக்குனர் செல்வராணி தலைமை வகித்து துறை சார்ந்த திட்டங்களான கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம், நுண்ணீர் பாசன திட்டம் மற்றும் நீர்வள நிலவள மேம்பாட்டு திட்டம் குறித்து விவசாயிகளுக்கு விளக்கிக் கூறினார்.






மேலும் விவசாயிகளுக்கு நிலக்கடலையில் விதை நேர்த்தி செய்முறைகள் நிலக்கடலையில் அதிகம் தாக்கும் இடைப்பேன் தடுக்க ஊதா வண்ண அட்டை பயன்படுத்தும் முறைகள் மற்றும் கடலை இரவைப் பயிரில் தாக்கும் இலை சுருள் பூச்சி கட்டுப்படுத்தும் முறைகள் மேலும் கடலை சுற்றி வரப்பில் பத்து அடிக்கு ஒரு ஆமணக்கு வைத்தால் கடலை பூச்சியை கட்டுப்படுத்தலாம் என்றும் தட்டைப்பயிர் வைப்பதால் நன்மை பூச்சி வரும் என்றும் கூறினார். உதவி வேளாண்மை அலுவலர் பன்னீர்செல்வம் உயிர் உரங்களின் முக்கியத்துவம் மற்றும் தமிழ் மண்வளம் மற்றும் நெல் நுண்ணூட்டத்தின் பயன்பாடு குறித்து எடுத்துக் கூறினார். உதவி தொழில்நுட்ப மேலாளர் சிந்தியா உழவன் செயலி பயன்பாடு பற்றி கூறி நன்றியுரை ஆற்றினார். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை ஆத்மா உதவி தொழில்நுட்ப மேலாளர் ஹர்ஷினி செய்திருந்தார்.



இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# ஏன் புயலுக்கு பெயர் வைக்கப்படுகிறது? தெரியுமா?



உலகின் ஒவ்வொரு பகுதியிலும் சூறாவளி, வெள்ளம், சுனாமி என இயற்கை பேரிடர்கள் வந்து போய் கொண்டுதான் இருக்கின்றன. ஆனால் நாம் புயலுக்கு மட்டும் தான் பெயரிட்டு அழைக்கிறோம். எப்போது இருந்து இந்த பெயர் சூட்டும் கலாச்சாரம் தொடங்கியது என தெரியும் முன்னர் புயல் எப்படி உருவாகிறது என்பதை பார்ப்போம்.

**புயல் எப்படி உருவாகிறது?**

ஒரு குழந்தை எப்படி படிப்படியாக (STEP BY STEP) வளர் கிறதோ, அதேபோல தான் புயலும் உருவாகி வளர்கிறது. இதனுடைய வளர்ச்சியை 3 படி நிலைகளாக பிரிக்கப்படுகிறது. அவை

1) காற்றழுத்த தாழ்வு பகுதி

2) காற்றழுத்த தாழ்வு மண்டலம்

3) ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம்

இந்த நிலைகளை கடந்த பின்பு வலுப்பெறும் போது தான் அதற்கு (புயலுக்கு) பெயர் சூட்டப்படும்.

**புயலுக்கு பெயர் வைத்த வரலாறு தெரியுமா?**

19 ஆம் நூற்றாண்டில், வானிலை அறிஞர்கள் மற்றும் வானிலை ஆய்வாளர்கள் புயல்களுக்கு தன்னிச்சையாக பெயர் சூட்டி வந்த வேளையில் பிரிட்டனை சார்ந்த வானிலை விஞ்ஞானி கிளெமெண்ட் ராக் ' என்பவர் தான் புயலுக்கு பெயர் சூட்டும் வழக்கத்தை தொடங்கினார்.

**ஏன் புயலுக்கு பெயர் வைக்கப்படுகிறது?**

உலக வானிலை அமைப்பு 1950 ஆம் ஆண்டு வானிலை குறித்த ஆய்வுகளுக்கு உருவாக்கப்பட்டது. இதிலுள்ள நாடுகள் 6 மண்டலங்களாக பிரிக்கப்பட்டு, அந்த மண்டலங்களுக்கு தான் புயலுக்கு பெயர் வைக்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, வங்கதேசம், மாலத்தீவு, மியான்மிர், ஓமன் மற்றும் தாய்லாந்து ஆகிய 8 நாடுகள் ஒன்றாக சேர்ந்து 64 பெயர்களை கொண்ட பட்டியலை தயாரித்து, அவற்றின் அடிப்படையில் 2004 ஆம் ஆண்டில் வங்ககடலில் உருவான புயலுக்கு பெயர் சூட்டப்பட்டு வந்தன.

2018 ஆம் ஆண்டு முதல் 8 நாடுகளுடன் ஈரான், கத்தார், சவூதி அரேபியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாடுகளும் பெயர்கள் தயாரிக்கும் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது. அதன்பிறகு உறுப்பு நாடுகள் ஒவ்வொன்றும் 13 பெயர்களை பரிந்துரைத்தன. அதன் பேரில் 169 பெயர்கள் கொண்ட பட்டியலில் இருந்து தான் தற்போது புயலுக்கு பெயர் வைக்கப்பட்டு வருகிறது. கடந்த டிசம்பர் மாத புயலுக்கு சவுதி அரேபியாவின் பெயரான‘ பெஞ்ஞல் என பெயர் வைக்கப்பட்டுள்ளது என்பது நமக்கு தெரிந்த விசயம் தான்.




**எப்படிப்பட்ட பெயர்களை வைக்க கூடாது. அது பற்றி தெரியுமா?**

1) புயலின் பெயர் எந்தவித அரசியல் சார்ந்த பெயர்கள், கலாச்சாரம், மத நம்பிக்கை போன்ற சம்மந்தப்பட்ட பெயர்கள் வைக்க கூடாது.

2) உலக மக்களை புண்படுத்தும் பெயர்களை வைக்கக் கூடாது.

3) புயலின் பெயர் சிறியதாகவும், உச்சரிக்க எளிதாகவும் இருக்க வேண்டும்.

4) புயலின் பெயரின் அளவு 8 எழுத்துகளுக்கு மேல் இருக்கக்கூடாது.

5) ஒரு முறை வைத்த பெயர் மீண்டும் வைக்க கூடாது.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# காகித தேநீர்க் கோப்பைகளைக் கொண்டு அங்கக உரம் தயாரித்தல்!

தேநீர்க் கடைகளில் சேகரித்த காகிதத் தேநீர்க் கோப்பைகளைக் கொண்டு அங்கக உரம் தயாரிக்கும் முறை

**தேவையான பொருட்கள்**

காகிதத் தேநீர்க் கோப்பைகள்

தேநீர்க் கடை கழிவுகள் (டீத்தூள்)

காய்ந்த தாவர இலைகள் (ஈரப்பதமற்ற இலைகள்)

**தொழுஉரம்**

பூசா (PUSA), மண் கரைசல் நுண்ணுயிரிப் பெருக்கி மாத்திரை (Certified by ICAR, IAR|- PUSA), (4 மாத்திரை கொண்ட பாக்கெட் விலை ரூ.279/– அமேசானில் கிடைக்கும்).

**செய்முறை**

முதலில் ஓர் அடி ஆழமுள்ள சிமெண்ட் தொட்டி அல்லது ஆழமான குழிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

**முதல் அடுக்கு :** ஈரப்பதமற்ற இலைகளைச் சேகரித்துக் காகிதத் தேநீர்க் கோப்பைகளுக்குச் சமமான அளவில் (3 கிலோ) நிரப்ப வேண்டும். காய்ந்த இலைகளைப் பயன்படுத்துவதன் மூலம் உரத்தின் கார்பன் தன்மையை அதிகரித்து உரத்தை எளிதாக மக்கச் செய்யலாம்.

**இரண்டாவது அடுக்கு :** சேகரித்த தேநீர்க் காகிதக் கோப்பைகளை நீரில் கொதிக்க வைத்து அதன் மெழுகுத் தன்மையை நீக்கி பிறகு தொட்டியில் நிரப்ப வேண்டும். அதன் பிறகு சிறிதளவு நீர் மேலோட்டமாகத் தெளிக்க வேண்டும்.

**மூன்றாவது அடுக்கு :** மண் கலவையைச் சேற்றுப் பதத்தில் கரைத்துத் தெளிக்க வேண்டும். ஏனென்றால், மண்கலவை நுண்ணுயிர் பெருக்கத்தை அதிகரிக்கும்.

**நான்காவது அடுக்கு :** தொழு உரம் 5 கிலோ வரை நீரில் கரைத்துத் தெளிக்க வேண்டும். தொழுவரத்தில் தழைச்சத்து மிகுதியாக இருக்கிறது.

இறுதியாகச் சாணக் கரைசலைத் தெளித்துக் காய்ந்த இலைகளை மேலே நிரப்புதல் வேண்டும்.

இதற்கு மேல் PUSA நுண்ணுயிரிப் பெருக்கி ஒரு மாத்திரையை 5 லிட்டர் நீரைக்கொண்டு கரைத்துத் தெளிக்கவும். இறுதியாகச் சணல் பையைக் கொண்டு மூடவேண்டும்.

பிறகு பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை உரப் படுக்கையைத் திருப்புதல் மக்குதலை எளிமையாக்கும்.

அறுபது நாளில் இருந்து எழுபது நாட்களுக்குள் அனைத்துப் பொருட்களும் நன்கு மக்கி நல்ல உரமாக மாறிவிடும்.

பின்பு அதனை மொத்தமாக மூட்டையில் நிரப்பி வயலுக்கு இடலாம் அல்லது வீட்டுத் தோட்டம் மற்றும் மாடித் தோட்டத்திற்கு




உரமாகப் பயன்படுத்தலாம்.

கூடுதலாய் இருக்கும் பட்சத்தில் முறையாக ஒரு கிலோ பைகளில் அடித்து விற்பனை மேற்கொள்ளலாம்.

தேநீர் கோப்பை மக்குவரத்தில் உள்ள சத்துக்கள் : நைட்ரஜன் : 1.2 சதவிகிதம், பாஸ்பரஸ் : 0.12 சதவிகிதம், பொட்டாசியம் : 2.5 சதவிகிதம்,இரும்பு : 115.5 மி.கிராம்/ கிலோ, துத்தநாகம் : 0.3 மி.கிராம்/ கிலோ, மாங்கனீஸ் : 1.6 மி.கிராம் / கிலோ, காப்பர்: 0.34 மி.கிராம்/ கிலோ இருக்கும் என சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் அ.சாகுல் அமீத் தெரித்தார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# நிலக்கடலை சாகுபடியில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பண்ணைப்பள்ளி துவக்கம்

அரியலூர், ஜன.8

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் வட்டார வேளாண்மைத் துறை மூலம் செயல்படுத்தப் பட்டு வரும் மாநில விரிவாக்கத் திட்டங்களுக்






கான உறுதுணை சீரமைப்புத் திட்டத்தின் கீழ் (அட்மா) நிலக்கடலை சாகுபடியில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த பண்ணைப்பள்ளி கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப் பட்டு வரும் இடையார் கிராமத்தில் துவக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சுப்ர மணியன் தலைமை வகித்தார்.

கிரீடு வேளாண் அறிவியல் மைய தொழில்நுட்ப வல்லுநர் ராஜ்கலா கலந்து கொண்டு நிலக்கடலை சாகுபடியின் முக்கியத்துவம் மற்றும் பருவத்திற்கேற்ற நிலக்கடலை இரகங்கள், விதையளவு, டிரைக்கோடெர்மா விரிடி கொண்டு விதை நேர்த்தி செய்தல், நிலம் தயார் செய்து விதைப்பு மேற்கொள்ளுதல், அடியுரமாக ஏக்கருக்கு 80 கிலோ ஜிப்சம் இடுதல் ஆகிய தொழில் நுட்பங்கள் குறித்து விளக்கினார்.

களை நிர்வாகம், நீர் நிர்வாகம், உர நிர்வாகம், நிலக்கடலை பயிரைத் தாக்கும் பூச்சிகள் மற்றும் நோய்கள், அவற்றைக் கட்டுப்படுத்தும் முறைகள், பின் அறுவடை தொழில் நுட்பங்கள், விற்பனை வாய்ப்புகள், மதிப்புக் கூட்டுதல் ஆகியவை குறித்த தொழில் நுட்பங்கள் பின்வரும் பண்ணைப்பள்ளி வகுப்புகளில் நடத்தப்படும். விவசாயிகளுக்கு தேவையான அளவு உரங்களை இட்டு சாகுபடி செலவைக் குறைத்து மண்வளத்தைக் காக்க மண் ஆய்வு செய்வதன் முக்கியத்துவம் குறித்து விளக்கப்பட்டு மண்மாதிரி எடுக்கும் முறை செயல் விளக்கம் செய்து காட்டப்பட்டது.

முன்னதாக வட்டாரத் தொழில் நுட்ப மேலாளர் மீனாட்சி அட்மா திட்ட செயல்பாடுகள் குறித்தும் உழவன் செயலியை பயன்படுத்தி இடுபொருட்கள் முன்பதிவு செய்யும் முறைகள் குறித்தும் விளக்கினார். கிராமத்தின் கலைஞர் திட்ட பொறுப்பு அலுவலர் மகேஸ்வரி கலந்து கொண்டு கலைஞர் திட்டம் மற்றும் தோட்டக்கலைத்துறை செயல்படுத்தும் திட்டங்கள் குறித்து விளக்கினார். உதவி தொழில்நுட்ப மேலாளர் ஆரோக்கியராஜ், மகேஷ்குமார் நன்றி கூறினர். இடையார் கிராமத்தைச் சேர்ந்த நிலக்கடலை சாகுபடி செய்து வரும் 25 விவசாயிகள் மற்றும் பண்ணை மகளிர் கலந்து கொண்டனர்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# விதை கிராம பயிற்சி

சேலம், ஜன.8

சேலம் மாவட்டம், வீரபாண்டி வட்டாரம் இனாம் பைரோஜி கிராமத்தில் தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ், 20 முன்னோடி விவசாயிகளை கொண்டு குழு அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்த குழுவிற்கு விதை கிராம தொழில்நுட்ப பயிற்சி துணை வேளாண்மை அலுவலர் ப.கிருஷ்ணமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

இக்குழுவின் செயல்பாடுகளை ஊக்குவிக்கவும், இடு பொருட்களை வாங்குவதற்கும் சுழல் நிதி குழுவிற்கும் வழங்கப்பட்டு உள்ளது என்று கூறப்பட்டது.

பயறு வகை கருவிதையில் இருந்து ஆதாரம் விதைகள் மற்றும் சான்று விதைகள் உற்பத்தி தொழில்நுட்பங்கள், விதைப்பண்ணை அமைத்தல், வயல்ஆய்வு, கலவன் நீக்குதல், விதைகள் கொள்முதல், விதை மாதிரி எடுத்தல், சான்றட்டை பொருத்துதல், சான்று பெற்ற விதைகள் விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்குதல் குறித்து எடுத்து கூறப்பட்டது. ஓய்வு பெற்ற துணை வேளாண்மை அலுவலர் கே.பழனிசாமி பயிற்சியாளராக கலந்து கொண்டு பயிற்சி வழங்கினார்.

வட்டார தொழில்நுட்ப மேலாளர் கே.ராஜேந்திரன் அனை வரையும் வரவேற்று இப்பயிற்சியின் முக்கியத்தும் குறித்து எடுத்து கூறினார்.

வேளாண் வணிக உதவி வேளாண் அலுவலர் மா.வான்மதி உழவர் சந்தை செயல்பாடுகள், குளிர்பதன கிடங்குகள், சோலார் உலர்த்தி ,பொருள்ஈட்டு கடன்கள் பற்றியும் உதவி வேளாண்மை அலுவலர் ஆ,குமார், உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் சி.சரஸ்வதி மற்றும் தீபன் முத்துசாமி ஆகியோர் பயிற்சி ஏற்பாடுகளை செய்து இருந்தனர் என்று வீரபாண்டி வேளாண்மை உதவி இயக்குனர் பா.கார்த்திகாயினி ஒரு அறிக்கையில் கூறியுள்ளார்.

தலைக் கவசம் உயிர்க் கவசம்
முறையாக தலைக் கவசம் அணிவோம்


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# விவசாயத்தில் நன்மை செய்யும் பூச்சி வகைகள் பற்றி தெரிந்து கொள்வோம்!

தீங்கு விளைவிக்கும் பூச்சிகளை வேட்டையாடும் நன்மை செய்யும் பூச்சிகள் இரண்டு வகைகள். 1. ஒட்டுண்ணிகள், 2. ஊண் விழுங்கிகள்.

### 1. ஒட்டுண்ணிகள்

பூச்சி ஒட்டுண்ணிகளை ஆங்கிலத்தில் பாரசிட்டாய்ட்ஸ் (parasitoids) என்று அழைக்கிறோம். பயிர்களைத் தாக்கும் முக்கிய பூச்சிகளை கட்டுப்படுத்த நன்மை செய்யும் பூச்சி ஓட்டுண்ணிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த ஓட்டுண்ணிகள் தீங்கு செய்யும் பூச்சிகளின் வளர்ச்சி (முட்டை, புழு, கூண்டுப் புழு, வளர்ந்த பூச்சி) நிலைகளை தேடி அவற்றில் தன் முட்டையிளை வைத்து பின்பு அழிப்பதால் இவை ஒட்டுண்ணிகள் எனப்பெயர் பெற்றன. ஓட்டுண்ணிகள் ஹைமி னோப்டீரா (Hymenoptera) மற்றும் டிப்டீரா (Diptera) என்ற இரண்டு பூச்சி வகைகளில் 80 சதவீதம் காணப்படுகின்றன. ஹைமினோப்டிரா வகை ஒட்டுண்ணிகளை குளவி இன ஒட்டுண்ணிகள் என்றும், டிப்டீரா வகை ஒட்டுண்ணிகளை ஈக்கள் இன ஒட்டுண்ணிகள் என்றும் வகைப்படுத்தலாம். குளவி இன தாய் ஒட்டுண்ணிகள் வயிற்றின் பின்புற நுனிப் பகுதியில் ஊசி போன்ற முட்டை இடும் உறுப்பை கொண்டது. ஆனால் டிப்டீரா வகை ஒட்டுண்ணிகளுக்கு வயிற்றின் பின்புற நுனிபாகத்தில் ஊசி போன்ற முட்டை இடும் உறுப்பு கிடையாது. பொதுவாக பூச்சி ஒட்டுண்ணி குடும்பங்களில் டிரைகோகிரம்மாட்டிடே, இக்னிமோனிடே, பிரக்கோனிடே, பெத்திலிடே, என்சிர்டிடே (குளவி ஒட்டுண்ணிகள்) சிர்பிடே, டாக்கினிடே (ஈ வகை ஒட்டுண்ணிகள்), போன்றவை முக்கியமானவை. ஒட்டுண்ணிகள் தீங்கு விளைவிக்கும் பூச்சிகளின் உடலின் உள்பகுதியிலோ அல்லது வெளிப்பகுதியிலோ முட்டையிடும். பூச்சிகளின் உடலின் உள்பகுதியில் முட்டையிடும் ஒட்டுண்ணி முட்டைகள் புழுக்களாக வெளிவந்து பூச்சிகளின் சத்துக்களை உட்கொண்டு அவற்றை அழித்து தன் இனத்தை பெருக்குகின்றன. இவ்வாறு பூச்சிகளின் உடலின் உள்பகுதியில் தன் வாழ்கையை முடிக்கும் ஒட்டுண்ணிகளை உட்புற ஒட்டுண்ணிகள் (Endoparasitoid) என்றும், பூச்சிகளின் உடலில் வெளிப்பகுதியில் முட்டையிட்டு

பூச்சிகளின் உடல் சத்தினை உறிஞ்சி பூச்சியை அழிக்கும் ஒட்டுண்ணிகள் வெளிப்புற ஒட்டுண்ணிகள் என்றும் அழைக்கப் படும். பூச்சியினங்களில் முட்டை பருவ ஒட்டுண்ணிகள் டிரைக்கோகிரம்மா, டெலினோமஸ், டெட்ராஸ்டிக்கஸ் புழுப்பருவ ஒட்டுண்ணிகள் பிரக்கோனிட், பெத்திலிட், சால்சிட், இக்னு மானிட், எலாஸ்மிட், டாக்கினிட் கூட்டுப்புழுப் பருவ ஒட்டுண்ணிகள் சால்சிட், ஈலோபிட், வண்ணத்துப்பூச்சி புழுப்பருவ ஒட்டுண்ணி எப்ரிகார்னியா மிகவும் முக்கியமான ஒட்டுண்ணிகள் .




## 2. ஊண் விழுங்கிகள்

பூச்சி ஊண் விழுங்கிகளை ஆங்கிலத்தில் பிரிடேட்டார்ஸ் (Predators) என்று அழைக்கிறோம். ஊண் விழுங்கிகளை இரை விழுங்கிகள் என்றும் கூறலாம். இவற்றினை பூச்சியின ஊண் விழுங்கிகள் என்றும் பூச்சியினத்தை சேராத இதர ஊண் விழுங்கிகள் என்றும் இரண்டு வகையாகப் பிரிக்கலாம். உதாரணமாக சிலந்திகள், பறவைகள் போன்றவை இதர ஊண் விழுங்கிகளாகும். ஊண் விழுங்கிகள் இரையினை பிடித்து அழிப்பதற்கு ஏற்றவாறு உடலில் சில சிறப்பு அமைப்புகளையும், குணங்களையும் பெற்றுள்ளன. நீளமான கால்களின் முட்கள் போன்ற அமைப்பு, எல்லா திசைகளிலும் சுழற்றி பார்ப்பதற் கேற்றவாறு தலைகழுத்து இணைப்பு, பெரிய கண்கள், மென்று திண்பதற்கேற்ற உறுதி வாய்ந்த தாடைகள், இரையினை அறிந்து கொள்ள உணர்வு கொம்புகள், மறைந்திருந்து தாக்குவதற்கேற்ற நிறமாற்றம் மற்றும் உருவ அமைப்பு, இரையினை செயல் இழக்க செய்வதற்கான சுரப்பிகள், ஊசி போன்ற வாய்ப்பகுதிகள். இந்த உறுப்புகளும், உடல் அமைப்பும் இரை விழுங்கிகளுக்கு பெரிதும் உதவுகிறது. உலகில் மொத்தம் 220 வகை ஊண் விழுங்கி பூச்சியினங்கள் இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது. இவற்றில் வண்டுகள், நாவாய்ப் பூச்சிகள், குளவிகள், கண்ணாடி இறக்கைப் பூச்சிகள் மிகவும் முக்கிய மானதாகும். ஊண் விழுங்கி பூச்சியினங்களில் பல வகை, இரையினை பிடித்து, கடித்து, குதறி மென்று உண்ணும் குணமுடையன. இவற்றிற்கு உதாரணமாக பொறிவண்டுகள், தட்டான், தொழுபூச்சி இவற்றைக்கூறலாம். இன்னும் சில வகை, இரையின் சாற்றினை உறிஞ்சி சாப்பிடும் தன்மையுடையன. இவற்றிற்கு உதாரணமாக மிரிட் மற்றும் ரெடுவிட் நாவாய் பூச்சியினங்களை கூறலாம். உலகம் முழுவதும் ஊண் விழுங்கி பூச்சிகள் உயிரியல் முறை பயிர்பாதுகாப்பில் சிறப்பாகச் செயல்படுகின்றன. பூச்சியினங்களில் பொறி வண்டுகள் கிரிப்டோலிமஸ், கைலோ மெணஸ், புருமஸ், ஸ்கிம்னஸ், கைலோகோரஸ், புள்ளி பொறி வண்டுகள், நாவாய்ப்பூச்சிகள் ரெடுவிட், மிரிட், ஆந்தோகோரிட் பூச்சிகள், பச்சைக்கண்ணாடி இறக்கைப்பூச்சிகள் கிரைசோபர்லா கார்னியா, கிரைசோபர்லா ஜாஸ்டீரோவி, தட்டான் இனங்கள், தட்டான், ஊசித்தட்டான், தொழுபூச்சிகள் மாண்டிஸ் கும்பிடுப் பூச்சி, தரைவண்டுகள், சிர்பிட் புழுக்கள், எறும்பு இனங்கள், சிலந்திகள், நீர் மிதப்போன் நீர்த்தாண்டிபூச்சிகள் மிகவும் முக்கியமான ஊண் விழுங்கிகள்.

பயிர்களைத் தாக்கும் பூச்சிகளை அழித்து நிலையாக வயல்களில் வாழ்வதால் பூச்சிகளின் எண்ணிக்கை மேலும் கட்டுப்படுத்தப்பட்டு பொருளாதார சேத நிலைக்கு குறைவாகவே வைக்கப்படுகின்றன. இவைகளை பெருக்கி வயல்களிலும், தோட்டங்களிலும் விடுவதாலும் இயற்கையிலேயே இருக்கும் ஊண் விழுங்கி பூச்சியை பாதுகாப்பதாலும் அவைகளை மேலும் மேலும் பெருக வாய்ப்பளிப்பதின் மூலமாகவும் நாம் நல்ல பலன் பெற முடியும். பூச்சிக்கொல்லி மருந்துகளின் பயன்பாட்டினை குறைக்க முடியும். சுற்றுக்குழலை பாதுகாக்க முடியும்.

தகவல் தொகுப்பு : **கா.அரிபுத்திரன், வேளாண்மை அலுவலர், உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகம், மாவட்ட ஆட்சியர் வளாகம், விருதுநகர் – 626 002. Email : agriari@gmail.com. Ph : 82480 80922.**




Rithvik® Pipe
PIPING FOR LIFE
UPVC PLUMBING PIPE | UPVC PRESSURE PIPE | WIRING PIPE | ASTM UPVC PIPE | WATER TANK
GARDEN HOSE | SUCTION HOSE | LATERAL HOSE
BIS
IS 4985 : 2021
IS : 4985
IS 9537
IS : 9537
LEAD-FREE
ISO
ISO : 9001
ONLY ISI PIPE MANUFACTURING COMPANY
LAB TEST REPORT VIA QR CODE
25 YEARS WARRANTY
20MM TO 250MM
MADE FROM FINE QUALITY RAW METERIALS
100% LEAD FREE PIPE
ONLY ISI PVC PIPE MANUFACTURING COMPANY
25 YEARS WARRANTY ON ABOVE 6 KG PVC PIPES.
20 MM TO 250MM IN ALL CLASSES AVAILABLE
PROVIDING TEST REPORT VIA QR CODE ON EACH PIPES.
Rithvik® Pipe
FOR ENQUIRIES
7561822226
9645877771
Rithvik Pipe
@rithvikpipecompany
rithvikpipe@gmail.com